ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2020.03.31 |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2020 சனவரி

### முக்கிய பண்புகள்

*வர்த்தகப் பற்றாக்குறையானது ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்த அதேவேளையில் இறக்குமதிகள் மீதான செலவினம் அதிகரித்தமையின் காரணமாக 2019 சனவரியுடன் ஒப்பிடுகையில் 2020 சனவரியில் விரிவடைந்தது. சுற்றுலாக் கைத்தொழிலானது 2019இன் இறுதியில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களிலிருந்து துரிதமாக மீட்சியடைந்த போதிலும் கொவிட் - 19 நோய்த்தொற்று 2020 சனவரியில் மீட்சியடைகின்ற போக்கினைத் திரும்பலடையச் செய்தது. தொழிலாளர் பணவனுப்பல்கள், 2020 சனவரியில் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன. அதேவேளை, அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான வெளிநாட்டு முதலீடுகள் 2020 சனவரியில் தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்த அதேவேளை கொழும்புப் பங்குச் சந்தையிலிருந்து தேறிய வெளிப்பாய்ச்சலொன்று அவதானிக்கப்பட்டது. இலங்கை ரூபா ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக பரந்தளவில் நிலையானதாகக் காணப்பட்டதுடன் மீண்டும் 2020 சனவரியில் உயர்வடைந்தது. ஆயினும், கொவிட் - 19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக மாச்சில் சடுதியாக பெறுமானத் தேய்வடைந்தது.*




இலங்கை மத்திய வங்கி, வணிகப் பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட “மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு” ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனை புள்ளிவிபரங்கள், பொருளாதாரக் குறிகாட்டிகள், மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு இன் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிடமுடியும்.
https://www.cbsl.gov.lk/en/monthly-trade-bulletin

## அட்டவணை 1: வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் சுருக்கம்[(அ)]

| வகை | 2019 ஐ.அ.டொ. மில் | மாற்றம் 19/18 (%) | சனவரி 2019 ஐ.அ.டொ. மில் | சனவரி 2020 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 11,940 | 0.4 | 1,038 | 1,005 | -3.2 |
| இறக்குமதிகள் | 19,937 | -10.3 | 1,655 | 1,735 | 4.8 |
| வர்த்தக மீதி (தேறிய) | -7,997 | | -617 | -730 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 3,607 (ஆ) | -18.0 | 460 (ஆ) | 431 (இ) | -6.5 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 6,717 | -4.3 | 545 | 581 | 6.5 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (ஈ) | -35 | | -14 | -16 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் (மொத்தம்) | 6,561 | | 286 | 140 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 596 | | 72 | 59 | |
| நீண்ட காலக் கடன்கள் | 1,565 | | 213 | 81 | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | 4,400 | | - | - | |
| ப.நா.நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதிப் பெறுகைகள் | 328 | | - | - | |
| வெளிநாட்டு நேரடி முதலீடு (உ) | 1,204 | | | | |
| திரண்ட நிலுவை | 377 | | -990 | 105 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை

(அ) தற்காலிகமானது

(ஆ) 2019 இற்கான சராசரி தங்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரி செலவின மதிப்பீடுகள் தொடர்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது

(இ) இந்த தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2020 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்

(ஈ) இரண்டாந்தர மற்றும் முதலாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது

(உ) இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக நியதிகள்

- **வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறையானது** ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஏற்றுமதிகளில் வீழ்ச்சியொன்றினாலும் இறக்குமதிகளில் அதிகரிப்பொன்றினாலும் முன்னிலைப்படுத்தப்பட்டு 2019 சனவரியில் ஐ.அ.டொலர் 617 மில்லியனிலிருந்து 2020 சனவரியில் 730 மில்லியனுக்கு விரிவடைந்தது. வர்த்தகப் பற்றாக்குறையின் அதிகரிப்பிற்கு பங்களிக்கப்பட்ட முக்கிய காரணிகள் வரைபடம் 1இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

- அதேவேளை, **வர்த்தக நியதியானது** அதாவது இறக்குமதிகளின் விலைக்கான ஏற்றுமதி விலைகளின் விகிதாசாரமானது இறக்குமதி விலைகளில் வீழ்ச்சியினைவிட விரைவான வேகத்தில் ஏற்றுமதி விலைகள் வீழ்ச்சியடைந்ததினால் 2020 சனவரியில் 3.7 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) சீர்குலைந்தது.

**வரைபடம்: 1 : 2020 சனவரியில் வர்த்தகப் பற்றாக்குறை சுருக்கமடைவதற்கு பங்களித்த முக்கிய காரணிகள் (ஐ.அ.டொ. மில்லியன்)**

**இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி (ஆ.ஆ)** **ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு (ஆ.ஆ)**




**மூலங்கள்:** இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை (2019 – 2020)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3: வர்த்தக நியதிகள் (2019 - 2020)**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்

- **வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களானது** 2019 யூலை தொடக்கம் அவதானிக்கப்பட்ட தொடர்ச்சியான ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சிப் போக்குடன் 2019 சனவரியுடன் ஒப்பிடுகையில் அனைத்து முக்கிய ஏற்றுமதித் துறைகளும் வீழ்ச்சியினைப் பதிவுசெய்ததன் மூலம் 2020 சனவரியில் ஐ.அ.டொலர் 1,005 மில்லியனுக்கு 3.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

- சிறு வேளாண்மை உற்பத்திகள் தவிர வேளாண்மை ஏற்றுமதிகளின் அனைத்துத் துணைத் துறைகளினாலும் தூண்டப்பட்டு **வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான** வருவாய்கள் 2020 சனவரியில் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்தன. குறைந்தளவான ஏற்றுமதி அளவுகள் மற்றும் சராசரி ஏற்றுமதி விலைகள் என்பனவற்றின் ஒன்றிணைந்த தாக்கத்தின் காரணமாக தேயிலை ஏற்றுமதிகளின் வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன. இதற்கு மேலதிகமாக, 2020 சனவரியில்

வாசனைத்திரவியங்களிலிருந்தான வருவாய்களும் வீழச்சியடைந்தன. இதற்கு பல துணை வகைகளின் குறைவான ஏற்றுமதி அளவுகள் குறைவடைந்த அதேவேளை சாதிக்காய் மற்றும் சாதிக்காய் சீவலுக்கானவை தவிர ஏற்றுமதிகளின் விலைகளும் வீழச்சியடைந்தமை முக்கிய காரணமாக அமைந்தன. ஐக்கிய அமெரிக்காவிடமிருந்தான குறைவான கேள்வியின் மூலம் கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழச்சியடைந்தன. அதேவேளை தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழச்சியடைந்தமைக்கு தேங்காய் உள்ளீட்டு உற்பத்திகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட தேங்காய் துருவல்கள் மற்றும் உள்ளீடற்றவையின் கீழ் நாரிழை என்பவற்றிலிருந்தான குறைவான ஏற்றுமதி வருவாய்கள் காரணமாக அமைந்தன. இதற்குமாறாக சிறு வேளாண்மை உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள், பாக்கு மற்றும் வெற்றிலைகளின் ஏற்றுமதிகளினால் முன்னிலைவகிக்கப்பட்டு மாத காலப்பகுதியில் அதிகரித்தன.

- பெற்றோலிய உற்பத்திகள், இரசாய உற்பத்திகள் மற்றும் இரத்தினக்கற்கள், வைரக்கற்கள் மற்றும் ஆரபரணங்கள் தவிர அநேகமாக அனைத்துத் துணைத் துறைகளிலிருந்தான குறைவான வருவாய்கள் மூலம் **கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான** வருவாய்கள் 2019 சனவரியுடன் ஒப்பிடுகையில் 2020 சனவரியில் வீழ்ச்சியடைந்தன. உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், தயாரிக்கப்பட்ட புகையிலை ஏற்றுமதிகள் மற்றும் நானாவித உணவுத் தயாரிப்புக்கள் மூலம் முன்னிலை வகிக்கப்பட்டு வீழ்ச்சியடைந்தன. இதற்குப் புறம்பாக, குறைவான டயர் ஏற்றுமதிகளின் மூலம் பிரதானமாக தூண்டப்பட்டு இறப்பர் உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன. ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதிகளில் அதிகரிப்பொன்று பதிவாகியமைக்கு மத்தியிலும் ஐக்கிய அமெரிக்கா மற்றும் இந்தியா, தென்கொரியா மற்றும் மெக்சிகோ போன்ற பாரம்பரியமற்ற சந்தைகளிலிருந்தான குறைவான கேள்வியின் விளைவாக புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான வருவாய்கள் சிறிதளவு வீழ்ச்சியடைந்தன. மேலும், அனைத்துத் துணை வகைகளின் குறைவான ஏற்றுமதிகள் மூலம் இயந்திரங்கள் மற்றும் பொறி உபகரணங்களிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன. மாறாக, உயர்வான நீர்க்கல எரிபொருள் அளவு, விலை அதேபோன்று படிக எண்ணெய் ஏற்றுமதிகளிலிருந்தான உயர்வான வருவாய்கள் என்பவற்றின் விளைவாக நீர்க்கல மற்றும் விமான எரிபொருள் ஏற்றுமதிகளிலிருந்தான உயர்வான வருவாய்களின் காரணமாக பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதி வருவாய்கள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன.
- **கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான** ஏற்றுமதி வருவாய்கள், அனைத்துத் துணை வகைகளிலும் பலவீனமான செயலாற்றம் மூலம் ஆண்டிற்கு ஆண்டு 2020 சனவரியில் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன.
- 2020 சனவரியில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 2.9 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்த வேளையில் ஏற்றுமதி அலகுப் பெறுமதிச் சுட்டெண்ணும் 6.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 2019 சனவரியுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதிகளில் வீழ்ச்சியானது ஒட்டுமொத்தமாக குறைவான விலைகளினால் தூண்டப்பட்டிருந்தது என்பதனை எடுத்துக்காட்டியது.

**வரைபடம் 4: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 5: ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | 2019 (ஐ.அ.டொ.மில். | மாற்றம் 2019/18 (%) | சனவரி 2019 (ஐ.அ.டொ. மில். | சனவரி 2020 (ஐ.அ.டொ. மில். | மாற்றம் சன 20/சன 19 (%) |
|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **9,426.30** | **1.8** | **826.4** | **812.6** | **-1.7** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 447 | -3.3 | 53.1 | 35.5 | -33.2 |
| விலங்குத்தீன் | 129 | 19.7 | 16.8 | 8.7 | -48.4 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 5,596.50 | 5.2 | 475.9 | 474 | -0.4 |
| இதில் ஆடைகள் | 5,205.50 | 4.9 | 444.5 | 436 | -1.9 |
| புடவைகள் | 284.3 | 9.3 | 22.9 | 27.2 | 18.8 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 106.7 | 10.2 | 8.4 | 10.8 | 27.7 |
| இறப்பர் உற்பத்திகள் | 866.1 | -1.1 | 80.7 | 70.2 | -13 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 305.7 | 10 | 24.1 | 24.7 | 2.3 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 400 | -8 | 36.8 | 30.5 | -17.2 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 145.9 | 21.3 | 8.8 | 7.2 | -18.5 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 521.1 | -16.2 | 37.5 | 82.8 | 120.9 |
| இரசாயன உற்பத்திகள் | 176.3 | 5.7 | 14.9 | 15.2 | 2 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 129.4 | -7.9 | 12.1 | 10 | -17.2 |
| அச்சிடல் கைத்தொழில்பொருட்கள் | 48.3 | 52.4 | 6.1 | 4.8 | -21.5 |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 102.9 | -30.3 | 13.1 | 5.6 | -57.6 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 73.5 | -5.4 | 6.8 | 5.5 | -19.2 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 176.5 | 6.7 | 14.1 | 12.8 | -9.6 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 30.1 | -3.9 | 2.4 | 2.1 | -12 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏனையவை | 278.1 | -0.3 | 23.2 | 23.1 | -0.4 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **2,461.90** | **-4.6** | **207.6** | **188.7** | **-9.1** |
| தேயிலை | 1,346.40 | -5.7 | 110.8 | 99.7 | -10 |
| இறப்பர் | 24.2 | -23.4 | 2.8 | 2.7 | -3.3 |
| தேங்காய் | 329.5 | 6 | 25.7 | 24.6 | -4.5 |
| வாசனைத்திரவியங்கள் | 312.5 | -13.2 | 27.8 | 19.5 | -30 |
| காய்கறிகள் | 32 | 13.3 | 2.7 | 2.6 | -0.4 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 34.7 | -2.4 | 2.1 | 1.6 | -23 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 120 | 1.4 | 8.4 | 14.3 | 71.1 |
| கடலுணவு | 262.5 | -1.3 | 27.4 | 23.7 | -13.5 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **33.9** | **-1.4** | **2.4** | **2** | **-15.4** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **17.9** | **0.6** | **1.7** | **1.5** | **-9.6** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **11,940.00** | **0.4** | **1,038.10** | **1,004.90** | **-3.2** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

- **வணிகப் பொருள் இறக்குமதிகள்** மீதானம் செலவினம், 2020 சனவரியில், உயர்வான நுகர்வோர் மற்றும் முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகளினால் தூண்டப்பட்டு ஐ.அ.டொலர். 1,735 மில்லியனுக்கு 4.8 சதவீதத்தினால் தொடர்ந்து இரண்டாவது மாதமாகவும் ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்தது.

- **நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள்** மீதான செலவினமானது உணவு மற்றும் குடிபானங்கள் மற்றும் உணவல்லா நுகர்வுப்பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினத்தின் அதிகரிப்பின் மூலம் 2020 சனவரியில் அதிகரித்தது. அதற்கமைய, உணவு மற்றும் குடிபானங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட காய்கறிகள் (முக்கியமாக பெரிய வெங்காயம்), பால் உற்பத்திகள் (முக்கியமாக பால்மா), சீனி மற்றும் வாசனைத் திரவியங்கள் (முக்கியமாக மிளகாய்) இறக்குமதிகள் அதிகரித்தன. அதேவேளை, உணவல்லா நுகர்வுப் பொருட்கள் வகைகளின் கீழ் தனிப்பட்ட உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் மீதான செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் தொடர்ச்சியாக இரண்டாவது மாதமாகவும் 2020 சனவரியில் வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. எவ்வாறாயினும், தனிப்பட்ட ஊர்திகள் இறக்குமதிகள் மீதான செலவினமானது 2019 திசெம்பருடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. இதற்கு மாறாக, குடிபானங்கள் (முக்கியமாக மதுசாரக் குடிவகைகள்) மற்றும் கடலுணவு (முக்கியமாக தகரத்தில் அடைத்த மீன்) இறக்குமதிகள் மீதான செலவினம் 2019 சனவரியுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தது.

- அதேவேளை **முதலீட்டுப் பொருட்கள்** இறக்குமதிகள் மீதான செலவினமானது பொறிகள் மற்றும் உபகரணங்கள் அத்துடன் போக்குவரத்துச் சாதனங்கள் என்பவற்றின் உயர்வான இறக்குமதிகள் காரணமாக 2020 சனவரியில் அதிகரித்தது. பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதான செலவினத்தின் அதிகரிப்பானது சுழலிகள், தொலைத்தொடர்பு சாதனங்கள் மற்றும் மின்சார பொறி மற்றும் உபகரணங்கள் மூலம் பிரதானமாக தூண்டப்பட்டிருந்தது. அதேவேளை, போக்குவரத்து உபகரணங்கள் மீதான செலவினமானது இயக்கவலு எஞ்சின்கள் மற்றும் புகையிரப் பெட்டிகள் போன்ற புகையிரத உபகரணங்கள் மற்றும் பார ஊர்திகள் மீது ஏற்பட்ட உயர்வான செலவினத்தின் மூலம் அதிகரித்தது. எவ்வாறாயினும், கட்டடப் பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினமானது

2020 சனவரியில் பாலங்கள் மற்றும் பாலப் பிரிவுகளின் தொடர்ச்சியான இறக்குமதிகள் மீதான உயர்வான செலவினத்திற்கு மத்தியிலும் குறைவடைந்தது. இதற்கு, இரும்பு மற்றும் உருக்கு அத்துடன் இரும்புச் சட்டங்கள் மற்றும் கம்பிகள் போன்ற அதன் பொருட்கள் இறக்குமதிகள் மீது செலவினம் குறைந்தமை முக்கிய காரணமாக அமைந்தது.

- 2019 சனவரியுடன் ஒப்பிடுகையில் மசகெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்தின் சராசரி இறக்குமதி விலைகள் அதிகரித்த போதிலும் **இடைநிலைப் பொருட்களின்** இறக்குமதிகள் மீதான செலவினம் 2020 சனவரியில் வீழ்ச்சியடைந்தது. இதற்கு, மசகெண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் நிலக்கரி ஆகிய அனைத்து துணைத் துறைகளினதும் குறைவான இறக்குமதி அளவுகளின் காரணமாக எரிபொருள் மீது செலவினம் குறைந்தமை முக்கிய காரணமாக அமைந்தது. இதற்கு மேலதிகமாக, அடிப்படை உலோகங்கள் (முக்கியமாக இரும்பு மற்றும் உருக்கு), கோதுமை மற்றும் கனிம உற்பத்திகள் (முக்கியமாக சீமெந்துக் கிளிங்கர்) இறக்குமதிகள் மீதான செலவினமானது 2020 சனவரியில் வீழச்சியடைந்தது. எனினும், புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் துணி மற்றும் நூட்பொருட்கள் இற்குமதிகள் மீதான உயர்வான செலவினத்தின் மூலம் முன்னிலை வகித்து அதிகரித்தது.
- இறக்குமதி அளவுச் சுட்டெண் 7.3 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் அலகுப்பெறுமதிச் சுட்டெண் 2.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையானது 2019 சனவரியுடன் ஒப்பிடுகையில் இறக்குமதிகளின் அளவானது ஒட்டுமொத்தமாக உயர்வான அளவுகளினால் தூண்டப்பட்டிருந்தது என்பதனை எடுத்துக்காட்டுகின்றது.

**வரைபடம் 6: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 7: இறக்குமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

### அட்டவணை 3: வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம்(அ)

| வகை | 2019 (ஐ.அ.டொ. மில். | மாற்றம் 2019/18 (%) | சனவரி 2019 (ஐ.அ.டொ. மில். | சனவரி 2020 (ஐ.அ.டொ. மில். | மாற்றம் சன 20/சன 19 (%) |
|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **3,956.50** | **-20.5** | **300.5** | **371.8** | **23.7** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 1,426.90 | -11.2 | 111.2 | 147.5 | 32.7 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 36.1 | -71.4 | 4 | 5.4 | 37 |
| இதில் அரிசி | 12.8 | -88 | 2.3 | 2.2 | -7.5 |
| பால் உற்பத்திகள் | 311.9 | -6.1 | 17.9 | 36.3 | 103 |
| காய்கறிகள் | 310 | 2 | 24.6 | 35.9 | 46 |
| கடலுணவு | 214.6 | 8.8 | 18.4 | 17.2 | -7 |
| சீனி மற்றும் சிற்றூண்டிகள் | 201.2 | -19.4 | 14.9 | 20 | 34.1 |
| வாசனைத்திரவியங்கள் | 115.4 | 1.3 | 8.8 | 10.3 | 18.1 |
| குடிபானங்கள் | 83.3 | -4.5 | 9.3 | 7.8 | -16.3 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 154.4 | -21 | 13.3 | 14.6 | 9.9 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 2,529.60 | -25 | 189.3 | 224.2 | 18.4 |
| தனியாள் ஊர்திகள் | 815.7 | -48.2 | 49.5 | 63.3 | 27.8 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 552.6 | 3.9 | 41.3 | 48.8 | 18.2 |
| புடவை மற்றும் ஆடைப்பொருட்கள் | 275.1 | -11.3 | 28.4 | 30.2 | 6.5 |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 206.6 | -11 | 14.3 | 20 | 39.7 |
| தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் | 247.2 | -9.3 | 20.4 | 23.3 | 14.4 |
| வீட்டுச் சாதனம் மற்றும் தளபாடங்கள் | 171.9 | 1.5 | 13.4 | 17.8 | 33.2 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 260.5 | -8.2 | 22.1 | 20.7 | -6.1 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **11,369.60** | **-9** | **956.1** | **934.5** | **-2.3** |
| எரிபொருள் | 3,891.60 | -6.3 | 329 | 291.9 | -11.3 |
| இதில் மசகெண்ணெய் | 970.7 | -0.8 | 87.8 | 46.9 | -46.6 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 2,706.40 | -7.9 | 186 | 207.2 | 11.4 |
| நிலக்கரி | 214.6 | -9.3 | 55.2 | 37.8 | -31.5 |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 201.4 | -64.8 | 16.6 | 13.9 | -16 |
| இதில் தங்கம் | 2.6 | -99.4 | 0.1 | 0.2 | 83.3 |
| புடவைகள் மற்றும் ஆடைப்பொருட்கள் | 2,909.40 | 1.8 | 262.5 | 300.8 | 14.6 |
| இரசாயன உற்பத்திகள் | 831.5 | -8 | 76.1 | 74.1 | -2.7 |
| பிளாத்திக்கு மற்றும் அவற்றின் பொருட்கள் | 612.9 | -12.1 | 53 | 49.7 | -6.1 |
| தாள் மற்றும் அட்டை மற்றும் அதன் பொருட்கள் | 457.3 | -13.6 | 38.6 | 38.1 | -1.2 |
| அடிப்படை உலோகங்கள் | 562.8 | -17.6 | 46.7 | 25.2 | -46.1 |
| வளமாக்கி | 221.4 | -15.4 | 3.7 | 6 | 59.5 |
| கோதுமை மற்றும் சோளம் | 346.4 | -7.3 | 14.5 | 8.9 | -38.5 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உணவுத் தயாரிப்புக்கள் | 227.7 | -23.3 | 23.3 | 26 | 11.9 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 187.9 | -9.5 | 15.3 | 20.7 | 35.6 |
| கனிம உற்பத்திகள் | 243.3 | 34.1 | 17.5 | 12.8 | -27.2 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 676.1 | -12.2 | 59.5 | 66.5 | 11.8 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **4,602.60** | **-1.9** | **398.5** | **428.2** | **7.5** |
| பொறி மற்றும் கருவிகள் | 2,489.70 | -0.1 | 231.2 | 258.7 | 11.9 |
| கட்டடப் பொருட்கள் | 1,508.70 | -1 | 132 | 119.3 | -9.6 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 596.6 | -10.7 | 34.8 | 49.9 | 43.4 |
| ஏனைய முதலீட்டுப்பொருட்கள் | 7.6 | 25.5 | 0.5 | 0.4 | -30.9 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **8.3** | **-88.9** | **0.3** | **0.9** | **164.1** |
| **மொத்த இறக்குமதிகள்** | **19,937.10** | **-10.3** | **1,655.50** | **1,735.30** | **4.8** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

- உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் தாக்கத்திலிருந்து **சுற்றுலாப் பயணிகளின் வருகைகள்** மீட்சியடையும் போக்கினை திரும்பலடையச் செய்து கொவிட் - 19 நோய்த்தொற்றின் பின்னர் சுற்றுலாத் துறையானது 2020 சனவரியில் பின்னடைவொன்றினை எதிர்கொண்டது. சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2019 சனவரியில் 244,239 உடன் ஒப்பிடுகையில் 2020 சனவரியில் 228,434 இற்கு 6.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ரஷ்யா, போலந்து மற்றும் உக்ரேன் ஆகிய நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2020 சனவரியில் அதிகரித்த (ஆண்டிற்கு ஆண்டு) அதேவேளை அவுத்திரேலியா, பிரான்ஸ், ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் சீனா போன்ற முக்கிய நாடுகளிலிருந்தான வருகைகள் வீழ்ச்சியடைந்தன.
- சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2019 சனவரியில் ஐ.அ.டொலர் 460 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020 சனவரியில் ஐ.அ.டொலர் 431 மில்லியனாக தற்காலிகமாக மதிப்பிடப்பட்டன.
- அதேவேளை, தொழிலாளர் பணவனுப்பல்கள் 2020 சனவரியில் 6.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்து ஐ.அ.டொலர் 581 மில்லியன் தொகையாகவிருந்தது.

**வரைபடம் 8: சுற்றுலாப்பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து நாடுகள்**




**மூலம்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி

**வரைபடம் 9: சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




**மூலங்கள்:** இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்

- 2020 சனவரியில் ரூபாப் பெயர்குறிக்கப்பட்ட அரச பிணையங்களில் ஐ.அ.டொலர் 19 மில்லியன் தொகையுடைய வெளிநாட்டு முதலீட்டின் தேறிய உட்பாய்ச்சலொன்று பதிவாகியது.
- முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களை உள்ளடக்கிய கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் வெளிநாட்டு முதலீடுகள் 2020 சனவரி மாதகாலப்பகுதியில் ஐ.அ.டொலர் 16 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்தன.
- மேலும், அரசாங்கத்திற்கான நீண்ட காலக் கடன்கள் 2020 சனவரி காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 85 மில்லியனுக்கு வகைகூறி தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தன.

## பன்னாட்டு ஒதுக்குகள்

- 2020 சனவரி இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 7.5 பில்லியனாக விளங்கி 4.5 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டன. அதேவேளை, 2020 சனவரி இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 10.3 பில்லியனாக விளங்கி 6.2 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டன.

**வரைபடம் 10: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## செலாவணி வீத அசைவுகள்

- சனவரி மாதத்திலும் அதே போன்று மாச்சின் முதல் வாரம் வரையிலும் பரந்தளவில் உறுதியானதாகக் காணப்பட்ட இலங்கை ரூபா கொவிட் - 19 நோய்த்தொற்று பரவலின் மூலம் சந்தையின் ஊக நடத்தையுடன் சடுதியாகத் தேய்வடைந்தது. அதற்கமைய, 2020 மாச்சு 30 அளவில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கு எதிராக 4.7 சதவீத தேய்வொன்றினைப் பதிவுசெய்தது. குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2020 மாச்சு 30 வரையான ஆண்டு காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்க டொலர், யூரே மற்றும் யப்பானிய யென் என்பவற்றுக்கெதிராக ரூபா தேய்வடைந்த அதேவேளை ஸ்ரேலிங் பவுன், கனேடிய டொலர், அவுத்திரேலிய டொலர் மற்றும் இந்திய ரூபா என்பவற்றுக்கெதிராக உயர்வடைந்தது.

**வரைபடம் 11: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2018 | 2019 | (2020 மார்ச் 30 வரை) உயர்வு (+)/ தேய்வு (-) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | -16.4% | +0.6% | -4.7% |
| யூரோ | -12.7% | +2.6% | -3.6% |
| பவுண் ஸ்ரேலிங் | -11.4% | -2.8% | +0.9% |
| யப்பானிய யென் | -18.1% | -1.0% | -5.8% |
| கனேடியன் டொலர் | -9.3% | -3.7% | +2.6% |
| அவுஸ்திரேலிய டொலர் | -7.6% | +1.3% | +8.7% |
| இந்தியன் ரூபா | -8.7% | +2.6% | +0.9% |

**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

**கொவிட் - 19 நோய்த்தொற்றுக்கு மத்தியில் வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள்**

உலகளாவிய மற்றும் உள்நாட்டுச் சந்தை நிச்சயமின்மைகள் மூலம் தோற்றுவிக்கப்பட்ட தொடக்கநிலை அழுத்தங்கள் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் குறிப்பாக 2020 மாச்சு மாதத்தின் இரண்டாம் அரைப்பகுதியில் உணரப்பட்டன. முக்கியமாக ஊக சந்தை நடத்தைகள் மற்றும் அரசாங்கப் பிணையங்கள் சந்தையிலிருந்தான வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல்கள் என்பனவற்றின் காரணமாக இலங்கை ரூபாவின் குறிப்பிடத்தக்க தேய்வொன்று அவதானிக்கப்பட்டது. மத்திய வங்கியானது உள்நாட்டு, வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் சில தலையீடுகள், அனைத்து தனிப்பட்ட உந்து ஊர்திகள் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகளையும் இடைநிறுத்தல், பிரயாணக் கொடுப்பனவாக வெளிநாட்டு நாணயத் தாள்களை வழங்குவதை உயர்ந்தபட்சம் ஐ.அ.டொலர் 5,000 வரை மட்டுப்படுத்தல் அத்துடன் இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகள் மூலம் இலங்கை நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை கொள்வனவு செய்வதனை இடைநிறுத்தல் உள்ளடங்கலாக பல எண்ணிக்கையான அவசர தொழிற்பாட்டு மற்றும் கொள்கைசார் வழிமுறைகளை மேற்கொண்டது.

அரசாங்கமானது நிலையான சக்தி விலைகளை உள்நாட்டு ரீதியாகப் பேணுகின்ற அதேவேளை, பன்னாட்டு மசகெண்ணெய் விலைகளின் துரிதமான வீழ்ச்சி தொடர்பில் கிடைக்கின்ற நன்மைகளை மிகவும் உற்பத்தித்திறன் மிக்கவாறு பயன்படுத்திக்கொள்வதனை இயலச்செய்வதற்கு எரிபொருள் விலை நிலைநிறுத்தல் நிதியமொன்றினை நிறுவியது.